**மத்துகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் ¹ரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 27 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்துகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதியப் பணிப்பாளர் நயகத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,913,110 தொகைக்காக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கடன்கொடுத்தோர் ஒதுக்கம் மேற்கொள்ளப்படும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,481,265 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில் லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். |
| (iii) | 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1,500,000 பெறுமதியான | கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரிக்கு விண்ணப்பம் |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு முச்சக்கர வண்டிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | சமர்ப்பித்தமையினால் கடன்கொடுத்தோர் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான பிழைகள் மேற்கொள்ளப்படமாட்டாது. |
| (iv) | மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 49,310 தொகை வேலைக் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டமையால் கடன்கொடுத்தோரிலிருந்து அகற்றப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை 2018 திசெம்பர் 15 இல் வங்கியிலிடப்பட்டு 2019 சனவரி 10 இல் கடன்கொடுத்தோரின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. |
| (v) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 979,708 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தாங்கி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 இன் போது சரி செய்யப்படும். |
| (vi) | 2019 அம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்ட ரூபா 526,351 தொகையான பொது வைப்பு மீதி மீளாய்வாண்டின் போது செலுதத் வேண்டிய வைப்பாக காண்பிக்கப்படடிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இன் போது சரி செய்யப்படும். |
| (vii) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 2,261,850 தொகையான புத்தக இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இன் போது சரி செய்யப்படும். |
| (viii | 2018 ஆம் ஆண்டிற்குரியதாக 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 217,891 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இன் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | மீளாய்வாண்டில் காண்பிக்கப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அகற்றப்பட்ட | நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை | 2019 இன் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களில் அகற்றப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |
| (x) | ரூபா 1,567,445 தொகையான பொருட் பதிவேட்டுப் பொருட்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் இருப்புப் பதிவேடு என்பன இல்லாமையினால் முறையே ரூபா 333,151,550 தொகை மற்றும் ரூபா 443,656 தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணிகளுக்கு புதிய மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் புதிய மதிப்பீடு கிடைத்ததன் பின்னர் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு இருப்புப் பதிவேடு 2019 இன் நிதிக் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படும். |

(இ) பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 358,225 தொகையான வீதி விளக்கு உதவி மீதியையும் ரூபா 96,000 தொகையான தனியார் பேரூந்து நிலைய கட்டண மீதியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக அறவிட வேண்டிய இந்த மீதி அறவிடப்பட வேண்டும். | வீதி விளக்கு உதவித்தொகையை அறவிடுதற்கு முடியாதிருந்தமையால் பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் தனியார் பேரூந்து நிலைய கட்டணத்தை அறவிடுவதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பேரூந்து நிலைய உரித்தை உறுதிப்படுத்துவதற்குரிய சட்டரீதியான மற்றும் ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதிகளில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் ஆதன வரிகளுக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் புதிய கண்டு பிடிப்புக்களைச் செய்தல் வேண்டும். | நீண்ட வழிமுறையொன்று இதற்காக பின்பற்ற வேண்டியிருந்தமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) 154(1) ஆம் பிரிவு | | கூறுகளாக்கி விற்பனை செய்யப்பட்ட எட்டு காணிகளில் இருந்து ஒரு சதவீத வரி அறவிடப்படவில்லை. | ஏலத்தில் அல்லது வேறுவகையில் காணி விற்பனை செய்வதாயின் சபைக்கு 1 சதவீத வரி அறவிடுவதற்கு அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தமையால் பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதனால் வரி அறவிடப்பட வேண்டும். | பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படாமையினால் மற்றும் காணிகளின் உரித்து தனி நபருக்குச் சொந்தமாகக் காணப்பட்டமையால் வரி அறவிட முடியாதிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(இ) | 326,760 | செயல்நிமித்த முற்பணம் தீர்க்கப்படடிருக்கவில்லை | உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக முற்பணம் தீர்க்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் சகல முற்பணமும் தீர்க்கபப்பட்டிருந்தது டன் 2018 ஆம் ஆண்டின் முற்பணம் தீர்த்தலில் தாமதம் ஏற்பட்டிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 1,736,704 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 | | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான சகல வாகனங்களுக்கும் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும் | சுற்றறிக்கையின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படும். |
| (ஈ) | 2004 யூலை 09 ஆந் திகதிய LG/05/2004 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து காப்புறுதிப் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | போதியளவான பணத்தை அறவிடல் அல்லது பிணை காப்புறுதி செய்யப்பட வேண்டும். | 2018 இன் போது போது பிணை காப்புறுதிக்காக பணம் செலுத்தப்பட்டிருந்த துடன் 2019 இன் போது அது நாளதுவரையாக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,020,020 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,752,763 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

## 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 14,776,500 | 14,554,045 | 12,180,632 | 2,373,413 | 15,123,000 | 14,281,441 | 12,572,291 | 1,709,150 |
| (ii) | வாடகை | 8,944,800 | 10,076,431 | 9,520,911 | 555,520 | 5,785,300 | 8,537,997 | 8,202,507 | 335,490 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 332,000 | 468,628 | 468,628 | - | 400,000 | 392,500 | 372,250 | 20,250 |

## 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 4,461,546 ஆக இருந்தது. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | சபையில் ஆதனவரி நிலுவையில் 05 வருடங்களை விட பழைய நிலுவை ரூபா 483,361 ஆகவும், 03-05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 93,306 ஆகவும், 01-03 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 869,217 ஆகவும், ஒரு வருடத்திற்குக் குறைவான நிலுவை ரூபா 2,249,851 ஆகவும் இருந்தன. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 வாடகை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 மே 31 இல் உள்ளவாறு வியாபார நிலைய நிலுவை வாடகை ரூபா 189,525 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4 வியாபார வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வியாபார வரி நிலுவை ரூபா 106,720 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 55,120 தொகை அதாவது 52 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.5 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 41,010,456 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய பட்டோலை தயாரிக்கப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) உப விதிகள்** | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 | உப விதிகள் விதிக்கப்படாத | சபை அதிகாரப் பிரதேசததில் அமுல்படுத்த முடியுமான 08 |

| | | |
|---|---|---|
| ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் 03 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | விடயங்களுக்கான உப விதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்கள் 09 ஆகும். | செயல்நடவடிக்கை கத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீடும் போது 2018 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினத்தின் அதிகரிப்பு ரூபா 8,824,847 தொகை அதாவது 60 சதவீதம் ஆக இருந்தது. வருடாந்தம் உயர்வடைந்து செல்லும் கழிவுப் பொருள் செலவினத்தை தீர்த்துக்கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரித்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | செலவினங்களைக் குறைப்பதற்காக பொருதத்மான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள் வரி அறவிடுவதன் மூலம் செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| 2019 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக போதியளவான | நிலைபேறான அபிவிருத்தி திட்டம் துரிதமாக அமுல்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும். |

அனுபவமொன்று இல்லாமையினால் மேற்கூறப்பட்ட திட்டத்தை அமுல்படுத்துவதில் பிரச்சினையான நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 பதவிகளில் 12 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியனருக்கு மேலதிகமாக நாட்கூலி அடிப்படையில் 06 உம், தற்காலிக அடிப்படையில் 16 உம் மற்றும் அரச நிர்வாகச் சுற்றறிக்கை 20/2014 இன் பிரகாரம் 06 பதவிகளில் 42 உத்தியோகத்தர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குவதற்கு 2019 மே 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவிகளை முறைமைப் படுத்துதலும் வெற்றிடங்களை நிரப்புதலும் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குமாறு கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமாக 23 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் நிரந்தர சாரதிகள் 09 பேர் மாத்திரம் இருந்தனர். | சாரதி வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | செயற்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சாரதிகளை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் கோரி உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 23 மயான நிலங்களின் உரித்து 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | 23 மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | சபைக்கு கையளிக்குமாறு கோரி பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

### 4. தீர்க்கப்படாதுள்ள அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி நடைபெற்ற மாகாண அரச கணக்குகள் செயற்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.5(ஈ), 2.6(ஆ) மற்றும் 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2(ஈ) பந்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கட்டளை 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் செயற்குழுவின் கட்டளைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். | 2019 பெப்ரவரி 22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் காலத்தை நீடிக்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் அதற்கு 02 மாத காலம் கணக்குகள் செயற்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 2.2.1(ஐ), மற்றும் (ஒ) பந்திகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தவறவிடப்பட்டமையால் 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். |